DEPOSITION OF WITNESS

Judicial Form No. 53

(See Rule 42)

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, No.I, UDUMALPET**

| | | |
|---|---|---|
| Calender | : | CC No. 17/2022 |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | |
| Sessions | : | |
| Deposition of Witness for | : | Prosecution P.W.1 |
| | | Defence |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | ராமகிருஷ்ணன் | தொழில் | : | |
| தகப்பனார் பெயர் / கணவர் பெயர் | : | கிட்டுசாமி | ஜாதி | : | |
| கிராமம் | : | | இனம் | : | |
| தாலூக்கா | : | | வயது | : | |
| Mail ID | : | | Mobile No. | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969, (Central Act 44 of 1969) on 17.04.2023.

**( முதல் விசாரணை ):**

1. நான் பொள்ளாச்சி தொண்டாமுத்தூரில் வசித்து வருகிறேன். நான் துணி வியாபாரம் செய்து வருகிறேன். இந்த வழக்கில் இறந்தவர் எனது தங்கையின் கணவர் ஆவார். 07.02.2021 அன்று மதியம் 12.45 மணிக்கு உடுமலைவ –பாலப்பம்பட்டி ஜோதிபாளையம் ரோட்டில் மேற்கிலிருந்து கிழக்காக நடந்து சென்று கொண்டிருந்தபோது பின்னால் வந்த வாகனம் மோதி விபத்து ஏற்பட்டதாக பரமசிவம் என்பவர் போன் மூலமாக எனக்கு கூறினார். பின்பு நான் உடுமலை அரசு மருத்துவமனைக்கு சென்று பார்த்துவிட்டு விபத்தில் ஏற்பட்ட காயத்தில் எனது மச்சான் இறந்துவிட்டார். இது சம்பந்தமாக உடுமலை காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன்.

2. என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். **(அந்த புகார் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** இது சம்பந்தமாக போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

## எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

1. இறந்துபோன எனது மச்சான் பாலப்பம்பட்டியில் இரண்டு வருடங்களுக்கு முன்பு ஓட்டல் சொந்தமாக வைத்திருந்தார். டிப்பர் லாரி மோதி விபத்து ஏற்பட்டது. அதன் ஓட்டுநர் பெயர் என்ன என்றால் காவல் நிலையத்தில் சொன்னார்கள் பெயர் ஞாபகம் இல்லை.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

Sd/-Vijayakumar,
நீதித்துறை நடுவர் எண்.1
உடுமலைப்பேட்டை.

DEPOSITION OF WITNESS

Judicial Form No. 53

(See Rule 42)

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, No.I, UDUMALPET**

| | | |
|---|---|---|
| Calender | : | CC No. 17/2022 |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | |
| Sessions | : | |
| Deposition of Witness for | : | Prosecution P.W.2 |
| | | Defence |

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : பரமசிவம் | தொழில் | : |
| தகப்பனார் பெயர் / கணவர் பெயர் | : தண்டபாணி | ஜாதி | : |
| கிராமம் | : | இனம் | : |
| தாலூக்கா | : | வயது | : |
| Mail ID | : | Mobile No. | : |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969, (Central Act 44 of 1969) on 17.04.2023.

**( முதல் விசாரணை ):**

நான் உடுமலை பாலப்பம்பட்டியில் வசித்து வருகிறேன். காய்கறி வியாபாரம் செய்து வருகிறேன். ( சாட்சி கையில் எழுதி வைத்துள்ள விவரங்களை பார்த்து சாட்சியம் அளித்தார்) 07.02.2021 அன்று மதியம் 12.45 மணி அளவில் நான் பாலப்பம்பட்டி ஜோதிப்பாளையம் ரோட்டில் தெற்கிலிருந்து வடக்காக எனது பைக்கில் சென்று கொண்டிருந்தபோது அதிவேகமாக வந்த அசோக் லைலான் லாரி எனது மச்சான் மீது மோதியது சம்பவ இடத்திலேயே எனது மச்சான் இறந்துவிட்டார். இது சம்பந்தமாக எனது தம்பி அசா1 இடம் தகவல் கூறினேன். அங்கு போலிசார் வந்தார்கள் இந்த விபத்து சம்பந்தமாக போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

விபத்தில் இறந்போதுனவர் எனது மச்சினன் ஆவார் அவர் பாலப்பம்பட்டியில் தான் வசித்து வந்தார். அவர் குடும்பத்தோடு அங்கு வசித்து வந்தாரா என்றால் வீட்டிலும் தங்குவார் ஓட்டலிலும் தங்குவார். மேற்படி விபத்தில் அடிப்பட்ட நபர் எந்த திசையில் இருந்து எந்த திசை

நோக்கி சென்றார் என்றால் தெற்கிலிருந்து வடக்கு நோக்கி சென்றார் நானும் தெற்கிலிருந்து வடக்காக பைக்கில் சென்றேன். மேற்படி சாலை தார் சாலை ஆகும். எவ்வளவு அகலம் என்றால் சுமார் 10 அடிக்கு மேல் இருக்கும். லாரி எந்த திசையில் இருந்து வந்தது என்றால் வடக்கிலிருந்து தெற்காக வந்தது. எந்த இடத்தில் விபத்து ஏற்பட்டது என்றால் மில்லுக்கு முன்புறம் ஏற்பட்டது. லாரியின் எந்த பகுதி விபத்தில் அடிப்பட்டவர் மீது மோதியது என்றால் லாரியின் வலது புறம் மோதியது.

2. விபத்தில் நான் பார்த்தேனா என்றால் பார்த்தேன். அடிப்பட்டு எங்கு விழுந்தார் என்றால் ரோட்டின் வலது புறமே விழுந்துவிட்டார் நான் பார்த்தபோது லாரியும் விபத்தில் அடிப்பட்டவரும் அடிப்பட்ட இடத்திலேயே இருந்தது. விபத்தை ஏற்படுத்திய வாகனத்தில் மணல் இருந்ததா என்றால் அது JCB ஏற்றிக்கொண்டு வந்தது. விபத்தில் அடிப்பட்டவரை மருத்துவமனைக்கு கொண்டு வந்தேனா என்றால் அக்கம் பக்கம் இருந்தவர் உதவியுடன் மருத்துவமனைக்கு கொண்டு வந்தேன். சம்பவ இடத்திலேயே இறந்துவிட்டார். 1 மணிக்கு அசா1 க்கு தகவல் கூறினேன். அசா1 சுமார் 1.15 மணி அளவில் விபத்து நடந்த இடத்திற்கும் மருத்துவமனைக்கும் வந்தார். அசா1 சம்பவ இடத்திற்கு வந்தபோது அங்கு யாரும் இல்லை மருத்துவமனைக்கு விபத்தில் அடிப்பட்டவரை எடுத்து வந்துவிட்டோம். எதற்காக விபத்தில் அடிப்பட்டவர் அந்த வழியாக சென்றார் என்று தெரியாது.

3. காவல் நிலையத்திற்கு சென்றபோது மணி என்ன என்று தெரியவில்லை.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

Sd/-Vijayakumar,
நீதித்துறை நடுவர் எண்.1
உடுமலைப்பேட்டை.